குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.128/2020

அ.சா.3

2025–ம் ஆண்டு நவம்பர் 17–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கமலா | தொழில் | |
| கணவர் பெயர் | மாது | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.55 மணி,

Accused A2.Manikandan present. A1.Chinnapaiyan S/o.Arumugam died and charge abated. Advocate Mr.Siddharthasankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓமலூர் வ.உ.சி நகரில் குடியிருந்து, வருகிறேன். அ.சா.1, அ.சா.2 ஐ தெரியும். என் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருக்கிறார்கள். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு சுமார் 02.00 மணியளவில் கலைச்செல்வியின் வீட்டிலிருந்து தாலிக்கொடியை பறித்துக்கொண்டு செல்கிறார்கள் என்று கத்தும் சத்தம் கேட்டது. நாங்கள் அவர்களது வீட்டிற்கு சென்று பார்த்தோம்.

2. கலைச்செல்வியிடம் இதுகுறித்து கேட்டதற்கு, அவர் கழுத்தில் அணிந்திருந்த 8 பவுன் தாலி செயினை பறித்து சென்றுவிட்டதாக சொன்னார்கள். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. நான் அ.சா.2 வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். அ.சா.1 கூறிதான் சம்பவம் பற்றி எனக்கு தெரியும் என்றாலும், நேரடியாக தெரியாது என்றாலும் சரி. அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால், அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:02:20 +0530

சம்பவம் நடந்த பின்பு, போலிசார் சம்பவ இடத்திற்கு வந்ததாக கூறியுள்ள நிலையில், எத்தனை போலிசார் வந்தார்கள் என்றால் எனக்கு நினைவில்லை.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 02.00 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:02:24 +0530